புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • பிப்ரவரி 08, 2024 • புரட்சி 24 • முழக்கம் 04 • விலை ரூ.3.00

## பாசிச பாஜகவை அதிகாரத்தில் இருந்து வீழ்த்துவோம்

# தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் சார்பில் பரப்புரை

கழகத் தலைமைக்குழுக் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சேலத்தில் 02.02.2024 அன்று முகில் நகரில் கழகத் தோழர் சீனிவாசன் இல்லத்தில் நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இணைய வழியாக (Skype) கலந்து கொண்டார்.

கூட்டத்தில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி:-எதிர்வரும் 2024-நாடாளுமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு கழகம் சார்பில் முன்னெடுக்க வேண்டிய செயல்திட்டங்கள் குறித்து விரிவாகப் பேசினார்.

தொடர்ந்து தலைமைக் குழு உறுப்பினர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கழகம்



முன்னெடுக்கவுள்ள பரப்புரைக்கான செயல் வடிவங்கள், முழக்கங்கள், பொதுமக்களிடம் விநியோகிக்கப்பட உள்ள துண்டறிக்கையில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை முன்வைத்தனர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பரப்புரை இயக்கத்துக்கான துண்டறிக்கையில் இடம்பெற வேண்டிய செய்திகளை தலைமைக்குழு முன் சமர்ப்பித்தார்.

நிறைவாக 2024 நாடாளுமன்றத் தேர்தலில் “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்!” எனும் முழக்கத்தோடு பரப்புரை இயக்கங்கள் வழியாக மக்களை நேரடியாக சந்தித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வாதிகார பாசிச பாஜக ஆட்சியின் கொடுமைகள் குறித்தும், மீண்டும் பாசிச பாஜக ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தால் இந்த நாடு சந்திக்கவிருக்கும் பேராபத்து குறித்தும் எடுத்துரைப்பதுடன், இந்த ஆபத்தைத் தடுக்க தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு தங்களது வாக்குகளை செலுத்தி 40 தொகுதிகளிலும் திமுக கூட்டணியை வெற்றி பெற செய்வதென முடிவு செய்யப்பட்டது.

வருகிற பிப்ரவரி 10 முதல் பிப்ரவரி 25 வரை தமிழ்நாடு முழுவதும் கழகம் சார்பில் பரப்புரை இயக்கம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் பரப்புரைக்கான துண்டறிக்கைகளை அச்சிடுதல், பரப்புரையில் ஈடுபடும் கழக செயல்வீரர்கள் மக்களிடம் தெரிவிக்க வேண்டிய தகவல்கள், புள்ளி விபரங்கள், திராவிட மாடல் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்து புத்தகம் ஒன்றை தயாரித்து வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் புரட்சிப் பெரியார் முழக்க சந்தா சேர்ப்பு, கழக செயலவைக் கூட்டத்தை மார்ச் 17 அன்று திருச்சியில் நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் (Skype), தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மயிலாடுதுறை இளையராஜா, சென்னை உமாபதி, காவலாண்டியூர் ஈஸ்வரன், சூலூர் பன்னீர்செல்வம், மேட்டூர் சக்திவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சென்னையில் பொதுக்கூட்டத்துடன் தொடங்குகிறது

*சென்னை மாவட்டக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! 2024 - நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் பிப்ரவரி 10, 2024, மாலை 6 மணிக்கு வேளச்சேரி காந்தி சாலையில் நடைபெறுகிறது.*




*கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வன்னிஅரசு, திராவிட முன்னேற்றக் கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சென்னை தெற்கு மாவட்டத் துணை அமைப்பாளர் தடா ஒ.சுந்தரம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் உமா ஆகியோர் கலந்து கொண்டு விளக்க உரையாற்றவுள்ளனர்.*

*திண்டுக்கல் : பழனியில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! பரப்புரை இயக்கம் பிப்ரவரி 10, 2024, காலை 10 மணிக்கு தொடங்குகிறது.*

# அண்ணாமலையின் பொய் - புரட்டுக்கு ஆணித்தரமான பதிலடி

## க.கனகராஜ் – சிபிஎம்

*வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுவதை அண்ணாமலை வழக்கமாக வைத்திருக்கிறார். அது தவறு என்று மற்றவர்கள் சுட்டிக்காட்டினாலும் அதற்காக வருத்தம் தெரிவிப்பதும் கிடையாது. அந்த வகையில் சமீபத்தில் தமிழ்நாடு அரசின் கடன் ரூ.8.23 லட்சம் கோடியாக அதிகரித்திருக்கிறது என்றும், இது வரலாறு காணாத உயர்வு என்றும் ஒவ்வொரு ரேசன் அட்டைக்கும் ரூ.3.8 லட்சம் கடன் இருக்கிறது என்றும் தமிழ்நாடு அரசை கடுமையாக சாடியுள்ளார். தமிழ்நாடு அரசின் கடன் நிலை குறித்து அண்ணாமலையின் விமர்சனம் ஒருபுறமிருக்க, எல்லா வளங்களையும், வரிகளையும் வாங்கி வைத்துக் கொண்டு மாநிலங்களை அல்லல்பட வைக்கும் ஒன்றிய அரசு எப்படி கடன் வாங்கியிருக்கிறது என்பதை அவர் வசதியாக மறந்து விட்டு மார்தட்டி அலைகிறார்.*

*சமீபத்தில் புயல், மழை, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு ஒரு பைசாகூட கொடுப்ப தற்கு இன்றளவும் மோடி அரசாங்கம் முன் வரவில்லை. இதுதவிர, ஒவ்வொரு ஒன்றிய அரசின் திட்டத்திலும் மாநில அரசுகளை சிக்க வைத்து திண்டாட வைப்பதை மோடி அரசாங்கம் தனது கொள்கையாகவே வைத்துக் கொண்டிருக்கிறது. உதாரண மாக, பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டம். பட்டியலின மற்றும் பழங்குடி மாணவர்க ளுக்கான 10ஆம் வகுப்பிற்கு பிந்தைய கல்வி உதவித் தொகை திட்டம். பிரதமர் கிராமப்புற வீடு கட்டும் திட்டம். பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டம். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.*

### பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டம்

*தொடக்க காலம் முதல் 2016-17ஆம் ஆண்டு வரை இந்த திட்டத்தில் விவசாயி காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பிரிமியம் தொகையில் ஒன்றிய அரசு, மாநில அரசு, விவசாயி ஆகியோர் இடையே 49:49:2 என்கிற விகிதத்தில் பிரித்துக் கொண்டிருந்தது. 2017ம் ஆண்டிற்கு பிறகு ஒன்றிய மோடி அரசாங்கம் இந்த திட்டத்திற்கு 25 சதவிகிதத்திற்கு மேல் தர முடியாது என கைவிரித்து விட்டது. மீதமுள்ள 24 சதவிகிதத்தை விவசாயிகள் தலையில் கட்ட முடியாது என்பதால் மாநில அரசாங்கமே இதனை ஏற்றுக் கொண்டது. இப்போது இந்த விகிதத்தை ஒன்றிய அரசு 25, மாநில அரசு 73, விவசாயி 2 என்ற விகிதத்தில் செலுத்துகிறார்கள். இதன் காரணமாக 2016-17ஆம் ஆண்டில் ரூ.566 கோடியாக இருந்த மாநில அரசின் சுமை இப்போது கடந்தாண்டில் ரூ.2050 கோடி யாக அதிகரித்திருக்கிறது.*

### பட்டியலின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை திட்டம்

*மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பட்டியல் மற்றும் பட்டியல் - பழங்குடியின மாணவர்களுக்கான 10ஆம் வகுப்பிற்கு பிந்தைய கல்வி உதவித் தொகையை 75 சதவிகிதத்தை ஒன்றிய அரசும், 25 சதவிகித்தை மாநில அரசும் கொடுத்து வந்தன. மோடி பதவியேற்ற பிறகு இரண்டு வருடங்கள் அந்த திட்டத்தையே நிறுத்தி வைத்தார். பிறகு, அந்த திட்டத்தில் ஒன்றிய அரசாங்கம் 60 சதவிகிதம் மட்டுமே கொடுக்கும். மீதியை மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று மாற்றிவிட்டார்கள். அந்த 60 சதவிகிதத்தையும் ஒழுங்காக கொடுப்பதில்லை என அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.*

### பிரதமர் வீடு கட்டும் திட்டம்

*கிராமப்புற வீடு கட்டும் திட்டத்திற்கு 1,20,000/- ரூபாய் என்று நிர்ணயித்துவிட்டு அதில் 60 சதவிகிதத்தை ஒன்றிய அரசு வழங்கும்; மீதி 40 சதவிகிதத்தை மாநில அரசு கொடுக்க வேண்டும் என்று வைத்தி ருக்கிறார்கள். 1,20,000 ரூபாயில் வீடு கட்ட முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசாங்கம் கிராமப்புற வீடுகளுக்கு 2,40,000 ரூபாய் கொடுக்கிறது. இதில் 72,000 ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசின் பங்கு. ஆனால், கொஞ்சமும், கூச்ச நாச்சமின்றி இந்த வீடுகட்டும் திட்டத்தை ‘மோடி வீடு’ என்றே பாஜகவினர் அழைக்கிறார்கள்.*

### நகர்ப்புற வீடு கட்டும் திட்டம்

*இத்திட்டத்திற்கு ரூ.2,40,000 என்று நிர்ணயித்து விட்டு ரூ.1,44,000 மட்டுமே ஒன்றிய அரசாங்கம் கொடுக்கும். இந்த திட்டத்திற்கு ரூ.5 லட்சம் முதல் ரூ.7 லட்சம் வரை மாநில அரசாங்கம் தனது நிதியிலிருந்து கொடுக்க வேண்டியிருக்கிறது.*

*இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இந்த நிலையில் மாநில அரசாங்கங்கள் தன் மாநில மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி யை காப்பாற்றுவதற்காக கடன் வாங்கி செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டி ருக்கிறார்கள். ஒருபக்கம் கூடுதலான சுமை யை சுமத்துவது. இன்னொரு பக்கம் மாநில மொத்த வரி வருவாயில் 3 சதவிகிதத்திற்கு மேல் கடன் வாங்கக் கூடாது என நிர்ப்பந்திப்பது ஒருவேளை கூடுதல் கடன் வாங்க வேண்டுமென்றால் மின்சாரத்தை விற்று விடு, பொதுத்துறை நிறுவனங்களை விற்று விடு என்று நிபந்தனை விதிப்பது என நெருக்கடியை*

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### தலையங்கம்

# யார் பிரிவினைவாதிகள்?

‘‘வடக்கு, தெற்கு இடையே ஓர் பரந்த வேறுபாடு உள்ளது. வடக்கு பழமைவாதத்தை கொண்டிருக்கிறது, தெற்கு முற்போக்கானது. வடக்கில் மூடநம்பிக்கை உள்ளது, தெற்கில் பகுத்தறிவு உள்ளது. தெற்கு கல்வி ரீதியாக முன்னோக்கி உள்ளது, வடக்கு கல்வி ரீதியாக பின்தங்கியுள்ளது. தெற்கின் கலாச்சாரம் நவீனமானது. வடக்கின் கலாச்சாரம் பழமையானது’’ என்றும், ‘‘தென் மாநிலங்களுக்கென தனி தலைநகர் ஒன்றை அமைக்க வேண்டும்’’ ன்றும் பரிந்துரைத்தவர் புரட்சியாளர் அம்பேத்கர்.

இன்றும் வடக்கு- தெற்குக்கு இடையிலான இந்த பாகுபாடு அப்படியேதான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வடமாநில மக்களின் தாய்மொழியை அழித்து இந்தியை பொதுமொழி ஆக்கியதுபோல, தென்னிந்தியாவில் மாற்றிவிட இயலவில்லை. மத ரீதியாக வடக்கில் வேரூன்றிய பாஜகவால், தென்னிந்தியாவில் வேரூன்ற முடியவில்லை. கல்வி – வேலைவாய்ப்பு – சுகாதாரக் கட்டமைப்புகளில் தென்னிந்தியாவுக்கு நிகராக வட இந்தியாவால் முன்னேற முடியவில்லை.

ஆனால் ‘‘வடக்கு வேறு, தெற்கு வேறு... என்று தென்னகத்தில் இருந்து குரல் எழும்போதெல்லாம் அதைப் பிரிவினைவாதம் என்கிறது பாரதிய ஜனதா கட்சி. உண்மையில் இந்த பிரிவினையை ஏற்படுத்துவது யார் என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது.

பிப்ரவரி ஒன்றாம் தேதி ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த 2024-25 நிதியாண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்படி, ஒட்டுமொத்த தென் மாநிலங்களுக்கும் 1.92 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களே முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால் உத்தரப் பிரதேசத்துக்கு மட்டும் 2.18 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. உ.பி., பீகார், ம.பி., ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய 5 மாநிலங்களுக்கு மட்டும் சுமார் 6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

தென் மாநிலங்களுக்கும் வட மாநிலங்களுக்கும் இடையில் ஏன் இந்த பாரபட்சம்? ஏற்கெனவே வரிப்பகிர்விலும் தென் மாநிலங்களை வஞ்சிக்கும் போக்குதான் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிக் கொண்டிருக்கிறது. 2014 முதல் 2023 வரையிலான பாஜக ஆட்சியின் முதல் 9 ஆண்டுகளில் தமிழ்நாட்டிடம் இருந்து நேரடி வரியாக 6.23 லட்சம் கோடி ரூபாயை வசூலித்திருக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் தமிழ்நாட்டுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையோ 2.46 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே.

நம்மிடம் இருந்து செல்லும் ஒவ்வொரு ஒரு ரூபாய்க்கும் 29 காசு மட்டுமே திரும்பி வருகிறது. கர்நாடகா 15 காசை மட்டுமே திரும்பப் பெறுகிறது. கேரளாவுக்கு 25 காசு மட்டுமே திரும்பி வருகிறது. ஆனால் உத்தரப் பிரதேசம் 2.73 ரூபாயையும், பீகார் 7.06 ரூபாயையும் பெறுகின்றன. ஆனால் பாஜக ஆளும் மாநிலங்கள் 2014 முதல் 2023 வரையிலான 9 ஆண்டுகளில் 2.33 லட்சம் கோடி ரூபாயை கொடுத்துவிட்டு, 15.35 லட்சம் கோடி ரூபாயைப் பெற்றிருக்கின்றன.

ஜி.எஸ்.டி. அமலாக்கத்தால் ஆண்டொன்றுக்கு 2,000 கோடி ரூபாயை தமிழ்நாடு இழந்து கொண்டிருக்கிறது. மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கக் கூட வடமாநிலங்களுக்கு 10,000 கோடி ரூபாய்க்கு மேல் எளிதாகக் கிடைக்கிறது. ஆனால் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்கு தமிழ்நாட்டுக்கு 3,500 கோடி ரூபாய் மட்டுமே விடுவிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு சமீபத்தில் கூறியிருந்தார். ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களில், ஒன்றிய அரசின் பங்கை தொடர்ச்சியாகக் குறைத்துக்கொண்டே வருகிறார்கள். நம்மைப் பார்த்து பிரிவினைவாதிகள் என்கிறது.

மிக்ஜாம் புயல், தென்மாவட்ட பெரு மழைக்கு நிவாரணமாக ஒன்றிய அரசால் ஒரு ரூபாய் விடுவிக்கப்படவில்லை. மாநில நிதியில் இருந்தே பேரிடரில் இருந்து மக்களை மீட்டிருக்கிறது திமுக அரசு. இப்படி தென் மாநிலங்களையும் வட மாநிலங்களையும் பிரித்து நிதிப்பகிர்வில் வஞ்சித்துக்கொண்டிருக்கும் பாஜக அரசு.

இப்போது மாநிலங்களுக்கான கடன் வழங்கும் அதிகாரங்களையும் நசுக்கத் துணிந்திருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்புக்கு உட்பட்டது. ஆனால் அதில் தற்போது ஒன்றிய அரசு தலையிடத் துணிந்திருப்பது, நிதிக் கூட்டாட்சிக்கு சவால் விடும் ஆபத்தான போக்கு.

இதனைக் கண்டித்து கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்திருக்கிறது. தலைநகர் டெல்லியில் (08.02.2024) அன்று கேரள அமைச்சரவை சார்பில் கருஞ்சட்டை அணிந்து போராட்டம் நடத்தப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிற திமுக அரசு, ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுப்பதாகவும், சட்டப் போராட்டத்திற்கு துணை நிற்பதாகவும் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. கேரள அரசின் போராட்டத்திற்கு ஒருநாள் முன்னதாக, பிப்ரவரி ஏழாம் தேதி டெல்லியில் கர்நாடக அரசும் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறது.

2018ஆம் ஆண்டில் இதேபோல நியாயமற்ற வரிப்பகிர்வைக் கண்டித்து தென் மாநிலங்கள் ஒருமித்துக் குரல் எழுப்பின. அரை நூற்றாண்டுக்குப் பிறகு திராவிட நாடு கோரிக்கைகள் எழ ஆரம்பித்தன. அந்த ஒருமித்த குரல், இப்போது இந்திய ஒன்றியத்தின் தலைநகர் டெல்லியில் ஆர்ப்பாட்டமாக வலுப்பெறுகிறது. தென் மாநிலங்களின் குரலை ஒன்றிய பாஜக அரசு, மீண்டும் அலட்சிப் போக்கோடு அணுகாமல் வரிப்பகிர்வில் நியாயமாக நடந்துகொள்ள முன்வர வேண்டும், கூட்டாட்சிக்கு சவால் விடும் போக்கு இந்திய ஒன்றியத்துக்கே பேராபத்தை விளைவிக்கும் என்பதை பாஜக அரசு உணர வேண்டும்.

# தலைமறைவு தியாகம்

*“தமிழ்நாட்டில் பாஜக வேகமாக வளர்ந்துவருகிறது. திமுகவுக்கு அடுத்த பெரிய கட்சி நாங்கள்தான் என்று மார்தட்டுகிறார்”அண்ணாமலை. இப்படி தமிழ்நாட்டில் பாஜகவை வளர்க்க நாங்கள் எவ்வளவு மகத்தான தியாகங்களை செய்ய வேண்டி இருக்கிறது என்பதே எதிர்க்கட்சிகளுக்கு புரியவில்லை என்றும் அண்ணாமலை வேதனைப்படுகிறார். அண்ணாமலையின் இந்த கட்சி வளர்ப்புப் பணிகளுக்காக அவருக்கு பாரத ரத்னா விருது கூட வழங்கலாம்.*

*ஆருத்ரா நிதி நிறுவனத்தை நடத்தி ரூ.2000 கோடி மக்களின் பணத்தை அண்ணாமலையின் சீடர்கள் ஹரிஷ், ஆர்.கே.சுரேஷ், அமர் பிரசாத் ரெட்டி ஆகியோர் வாரி சுருட்டிக்கொண்டார்கள் என்று குற்றம்சாட்டுகிறார்கள். இவையெல்லாம் மகத்தான தியாகங்கள் என்பது எதிர்க்கட்சிகளுக்கு தெரியாது. கைது செய்யப்பட்ட ஹரிஷ் பாஜகவின் மாநிலப் பொறுப்பாளர். இந்த மாநிலப் பதவிகூட ஏதோ லாட்டரி சீட்டு போல அவருக்கு கிடைத்துவிடவில்லை. அதற்காக முதலீட்டாளர்கள் பணத்தை எடுத்து பாஜக தலைமைக்கு உண்டியல் காணிக்கை செலுத்திவிட்டுத்தான் இந்த பதவியை அவர் பெற்றார். அப்படித்தான் கைது செய்யப்பட்ட பாஜகவைச் சேர்ந்த ஹரிஷ் வாக்குமூலம் தந்திருக்கிறார். அதாவது தேர்தல் பத்திரத்துக்கு மோடி ஆட்சி கார்ப்ரேட்களிடம் வசூலிப்பது போல. தமிழ்நாட்டின் கோயில் நிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே கொள்கைக்காக அறநிலையத்துறையிடம் இருந்த நிலங்களை பாஜகவினர் பொறுப்போடு கைப்பற்றி தங்கள் வசம் வைத்திருந்தார்கள். அந்த நிலங்களை கைப்பற்றியதற்கு தேசபக்திதான் காரணம். ஆனால் அறநிலையத்துறை அந்த நிலங்களை மீட்டு அரசிடம் ஒப்படைத்திருக்கிறது என்று சொன்னால் அது இந்து விரோத நடவடிக்கை அல்லவா? பல்லாயிரம் கோடி நிலங்களை பாஜகவினரிடமிருந்து மீட்டுவிட்டோம் என்று சேகர்பாபு கூறுவது இந்துக்களையே அவமதிப்பதாகும். அறநிலையத்துறை சொத்துக்கள் அரசிடம் இருப்பதை விட, பாஜகவனிரிடம் இருப்பதுதான் பாதுகாப்பு என்று சேகர்பாபுவுக்கு தெரியாதா? தில்லை தீட்சிதர்களுக்கு நடராசர் கோயில் சொந்தமென்றால் ஏன் கோயில் சொத்துக்கள் பாஜகவுக்கு சொந்தமாகக்கூடாது? இப்படியொரு வழக்கை பாஜக வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்தால் அறநிலையத்துறை நிலங்களை மீட்பது தவறு என்று நிச்சயமாக நீதிபதிகளும் தீர்ப்பு வழங்குவார்கள்.*

*மோடி தமிழ்நாடு வந்தால் கூட்டம் அலை மோதுகிறது என்று சொன்னால், அந்த கூட்டத்தைக் கூட்டுவதற்கு நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறோம் என்பது யாருக்காவது புரியுமா? பாஜக இதற்காக எவ்வளவு செலவிட வேண்டி இருக்கிறது? எவ்வளவு தியாகங்களை நாம் செய்கிறோம் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு தியாக சம்பவத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*அண்ணாமலையின் நெருங்கிய நண்பர் அமர்பிரசாத் ரெட்டி இப்போது தலைமறைவாக வாழ வேண்டி இருக்கிறது. என்ன காரணம்? சொந்த கட்சியை சார்ந்த பாஜக பெண் நிர்வாகி கோட்டூர் ஆண்டாள் என்பவரை அடித்து உதைத்து இருக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறார்கள். எதற்காக அப்படிச் செய்தார்? மோடியின் கூட்டத்துக்கு ஆள் சேர்க்க கொடுத்த பணத்தை ஏன் சுருட்டிக்கொண்டாய் என்ற நியாயமான கேள்வியைக் கேட்டிருக்கிறார். இது ஒரு குற்றமா? இது எங்களுக்குள் பணத்தை பங்கு போட்டு பிரிப்பதில் உள்ள குடும்பச் சண்டை. ஆண்டாள் புகார் கொடுத்தார் என்பதற்காக அமர் பிரசாத் ரெட்டியை தேட வேண்டுமா? இதுவே பாஜக ஆளும் மாநிலமாக இருந்தால் ரெட்டிக்கு பாராட்டு விழா நடத்தி இருக்கமாட்டார்களா? திமுக ஆட்சியின் இந்து விரோத கொள்கையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*இப்போது குடும்பத்தை மறந்து கட்சியை வளர்க்காமல் தலைமறைவு எனும் தியாக வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைக்கு இந்த ஆட்சி தள்ளிவிட்டது. இதற்கெல்லாம் திமுக ஆட்சி பதில் சொல்லும் காலம் கட்டாயம் வந்தே தீரும். நாங்கள் இரண்டாவது இடத்தில் வந்தே தீருவோம் இது உறுதி.*

*சரி எடப்பாடியும் இப்போது போராட்டக்களத்தில் இறங்கியிருக்கிறார். திமுக சட்டமன்ற உறுப்பினரின் மகன் - மருமகள் தனது வீட்டில் வேலை செய்யும் தலித் சிறுமியை சித்ரவதை செய்ததை கண்டித்து அவரது கட்சி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறது. தலித் மக்கள் உரிமைக்காக அதிமுகவையே முதன்முதலாக போராட வைத்தது திமுக ஆட்சியின் மிகப்பெரிய துரோகம். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவாகி, அவர்களைப் பிடிக்க தேடுதல் வேட்டை நடத்தி கைது செய்திருக்கிறது. ஏன் அவர்களை கைது செய்ய வேண்டும். சரி, முன் ஜாமீன் கேட்டு தலைமறைவானவர்கள் வழக்கு போட்ட போது நீதிபதி அவர்கள் சரணடையும் போது பிணை வழங்கலாம் என்று கூறினார். ஆனால் திமுக ஆட்சி நீதிபதியின் கருத்தை மதிக்காமல் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தது. திமுக ஆட்சி இப்படி குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருந்தால் நாங்கள் எப்படி போராட்டம் நடத்துவது? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் தானே நாங்கள் போராட முடியும். எனவே எங்களின் போராட்டத்தை ஒடுக்கவே ஸ்டாலின் சதி செய்கிறார். ஆனாலும் கூட என்னதான் அரசு நடவடிக்கை எடுத்தாலும் எங்களது போராட்டத்தை ஒடுக்க முடியாது, எந்தக் கொம்பனாலும் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. நாங்கள் போராடியே தீருவோம் என்று கூறி காவல்துறையின் அனுமதியுடன் போராட்டத்தை நடத்தி முடித்திருக்கிறார்.*

*தலைமறைவு வாழ்க்கை - உறுதியான போராட்டம் என்று தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கிவிட்டனர் அண்ணாமலையும், எடப்பாடி பழனிசாமியும். ஜெய்ஹ்ரீராம்! புரட்சித் தலைவி நாமம் வாழ்க!*

**கோடங்குடி மாரிமுத்து**

# இந்துராஷ்டிரத்திற்குள் அடங்க மறுக்கும் தமிழ்நாடு (4)



**பேராசிரியர் ஜெயராமன்**

*(01.02.2024 இதழில் வெளியான உரையின் தொடர்ச்சி)*

1953இல் ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிந்தது. 1956-இல் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகியவை மொழிவழி மாநிலங்களாக அமைகிறது. இந்த ஐந்து மாநிலங்களையும் ஒன்றிணைத்து தட்சிணப் பிரதேசமாக அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு கூறியபோது, பெரியார் இதை கடுமையாக எதிர்த்து, தற்கொலைக்கு சமம் என்றார். திருவனந்தபுரத்தில் நேரு இதைப்பற்றி கேட்கும்போது “பெரியார் இதை எதிர்க்கிறார், ஏற்க முடியாது” என்று கூறினார் காமராசர். நேருவுக்கு பெரியார் என்றால் யாரென்று தெரியும். அதனால் சத்தமில்லாமல் அந்தத் திட்டத்தை கைவிட்டார். இப்படி பெரியார் சொன்னவைகள்தான் நீதிக்கட்சி ஆட்சி முதல் சட்டங்களாக ஆனது, பெரியார் சொன்னதுதான் காமராசர் ஆட்சியில் திட்டங்களாக மாறின. மக்களுக்கு கல்வியை கொடுங்கள் என்று காமராசரிடம் பெரியார் சொன்னபோது அதை அப்படியே மறுக்காமல் நிறைவேற்றினார் காமராசர். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பள்ளிக்கூடம், ஐந்து மைல் தொலைவுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளிகள் வந்தன. அப்பொழுதுதான் எல்லாரும் படிக்க வந்தார்கள்.

மயிலாடுதுறை நடந்த ஒரு கூட்டத்தில் பெரியாருக்கு தங்கத்தினால் ஆன செயின் ஒன்றை கழகத் தோழர்கள் அணிவித்த போது, இதை எனக்கு அணிவிக்காதீர்கள், காமராசரின் காலடியில் வையுங்கள் என்று பெரியார் சொன்னாராம். ஏனென்றால் இந்த மக்களின் கல்விக்கண்ணை திறந்தவர் காமராசர். காமராசர் ஆட்சி முடிந்த பின்னர் திமுக ஆட்சிக்கு வந்தது. இந்த ஆட்சியை பெரியாருக்கு அற்பணிக்கிறோம் என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. பெரியார் நினைத்ததுதான் அண்ணா ஆட்சியில் திட்டங்களானது. அடுத்து கலைஞர் ஆட்சிக்கு வந்தார். “கோயில் வாசல் வரை வந்த என் மக்களை கற்ப கிரகத்துக்குள் அனுமதி மறுக்கிறார்கள், இது என் நெஞ்சில் முள் போன்று குத்துகிறது” என்றார் பெரியார். உடனே அனைத்து ஜாதியினரும் அர்ச்சராகலாம் என்ற திட்டத்தை அறிவித்து பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றினார் கலைஞர். அப்படியானால் கடந்த நூறாண்டுகளாக பெரியார் காட்டிய வழியில்தான் ஆட்சியதிகாரங்கள் செயல்பட்டு வருகின்றன.

பெரியார் இறந்து 50 ஆண்டுகள் ஆகிறது. ஆனாலும் இன்றும் சங் பரிவாரக் கூட்டம் பயந்து அலறுகிறது. பெரியார் பெயரை கேட்டாலே அமித்ஷாவுக்கும், மோடிக்கும் இன்னும் அலர்ஜியாகவே இருக்கிறது. எச். ராஜா பயப்படுகிறார். இவர்களுக்கெல்லாம் சிம்மசொப்பனமாக திகழ்ந்தவர் பெரியார். அதனால் தான் எந்த தலைவரையும் அவர்களால் இப்படி எதிர்க்க முடியவில்லை. பெரியார் என்ற பிம்பத்தை, பேருருவத்தை தகர்த்தாக வேண்டும். திராவிடம் என்ற கருத்தியலை தகர்த்தாக வேண்டும். அப்படி தகர்த்தெரியாவிட்டால் இந்து ராஷ்டிரத்திற்குள் தமிழ்நாட்டைக் கொண்டுவர முடியாது. அந்த கவலையில்தான் அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இந்தியா முழுவதும் இந்து என்ற அடைமொழியோடு செல்லும் அவர்கள், தமிழ்நாட்டிற்குள் மட்டும் தமிழ் முழக்கத்துடன் வருகிறார்கள். இந்த முழக்கம் தமிழ்நாட்டில் எடுபடாது என்பது அவர்களுக்கு நன்றாகப் புரிகிறது. ஆனால் தமிழ் தமிழ் என்று பேசிக்கொண்டே இந்துத்துவா திட்டங்களைப் புகுத்த ஆரம்பிப்பார்கள். பெரியாரை திட்டுகிறவர்கள், திராவிடம் என்ற சொல்லை வெறுக்கிறவர்கள் எல்லாம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்துத்துவா சேவையில் இருக்கிறார்கள்.

2023ஆம் ஆண்டு “விஷ்வகர்மா யோஜனா” என்ற ஒரு புதிய திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தின் வாயிலாக 18 ஜாதிகள் தங்களது ஜாதித் தொழில்களான முடிவெட்டுதல், பானை செய்தல் உள்ளிட்டத் தொழில்களை பாரம்பரியமாக செய்ய வேண்டும். இதற்கு ஒன்றிய அரசு நிதியுதவி செய்கிறது. இவர்கள் தங்களது ஜாதித் தொழில்களைக் கைவிடக்கூடாது என்பதற்காகவே “விஷ்வகர்மா யோஜனா” என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

பார்ப்பனர்கள் கோயிலுக்குள் உள்ள சிலைக்கு சந்தனம், அரப்பு உள்ளிட்டவைகளை தடவி, பின்னர் தண்ணீர் ஊற்றி கழுவிய பிறகு பாலாபிஷேகம் செய்வார்கள். ஆனால் அந்த சிலை அப்படியே இருக்கும். இது ஒன்றும் கடினமான பணியல்ல. ஆனால் முடி வெட்டுதல் என்பது எவ்வளவு கடினமானது. அந்த தொழிலையே செய்பவர்கள் அர்ச்சகராக சென்றால் எவ்வளவு எளிமையாக அந்த பணியை செய்வார்கள்? ஏனென்றால் அந்த சிலை தனது தலையை திருப்பாது, எந்த கடவுள் சிலையாவது தலையை திருப்பியதாக வரலாறு உண்டா? நீங்கள் யாராவது பார்த்ததுண்டா? அதனால் பார்ப்பன அர்ச்சகர்களை விட முடித் திருத்தும் தொழிலாளர்கள் பல மடங்கு உயர்ந்தவர்கள், அர்ச்சகர் பணியை மிக எளிதாகச் செய்வார்கள். அவர்களைதான் கோயில் அர்ச்சகர்களாக நியமனம் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

> **இந்தியா முழுவதும் இந்து என்ற அடைமொழியோடு செல்லும் அவர்கள், தமிழ்நாட்டிற்குள் மட்டும் தமிழ் முழக்கத்துடன் வருகிறார்கள். இங்கு இந்து முழக்கம் தமிழ்நாட்டில் எடுபடாது என்பது அவர்களுக்கு நன்றாகப் புரிகிறது.**

1971-இல் தந்தை பெரியார் அனைத்து ஜாதியினரும் கோயில் கற்ப கிரகத்துக்குள் நுழைய முடியாமல் இருப்பதை பார்த்து “தனது நெஞ்சில் குத்திய முள்” என்று குறிப்பிட்டார். 1974ஆம் ஆண்டு அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராலம் என்ற சட்டத்தை அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இயற்றியது. இந்த சட்டத்தை எதிர்த்து பார்ப்பனர்கள் நீதிமன்றத்துக்கு சென்றனர். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம், ஆனால் ஆகம முறையை பின்பற்ற வேண்டும். ஆகவே இவர்களால் அர்ச்சகராக முடியாது என்று வாதிட்டனர். எனவே இந்த சிக்கல் தொடர்ந்தது. 2007ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த கலைஞர் முறையாக பயிற்சி பெற்றவர்கள் அர்ச்சகர் ஆகலாம் என்று கூறி ஆகம பயிற்சிப் பள்ளிகளை தொடங்கினார்.

2015ஆம் ஆண்டு நீதிபதி ரஞ்சன் கோகாய், பயிற்சி பெற்றவர்கள் அர்ச்சகராவதில் தடையில்லை என்று தீர்ப்பு வழங்கினார். 2018ஆம் ஆண்டு மாரிசாமி என்ற சூத்திரர் அர்ச்சகரானார். 2011இல் பயிற்சி பெற்ற பெண் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டனர். தற்போதுவரை 15 பெண் ஓதுவார்கள் இருக்கிறார்கள். 2023இல் ரம்யா, ரஞ்சிதா, கிருஷ்ணவேணி என்ற 3 பெண் உதவி அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் ரஞ்சிதா ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர், ரம்யா கூலித் தொழிலாளியின் மகள், கிருஷ்ணவேணி பூசாரி வகுப்பைச் சார்ந்தவர்.

1924ஆம் ஆண்டு வைக்கம் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டம் 604 நாட்கள் வரை நீடித்தது. வழக்கறிஞராக இருந்தாலும் கூட சூத்திர, பஞ்சமர்கள் வைக்கம் கோயில் சாலையிலேயே நுழைய முடியாது. அந்த சாலையில் நடக்க உரிமை வேண்டிதான் சுமார் 2 ஆண்டுகள் போராடினார்கள். அந்த போராட்டத்தின் போது அங்கிருக்கும் உள்ளூர் தலைவர்களெல்லாம் கைதானபோது, போராட்டத்தை தலைமையேற்று நடத்த பெரியாருக்கு அழைப்பு வந்தது. பெரியார் வைக்கம் சென்றார். அவர் போராட்டத்தில் கெட்டிக்காரர். அவரை யாரும் முடக்கிவிட முடியாது. திருவனந்தபுரம் முதல் நாகர்கோயில் வரைக்கும் கடுமையான பரப்புரையை மேற்கொண்டார். அங்கிருந்த பேராசிரியர் குசுமன், பெரியாருடைய நாவண்மை, மக்களைத் திரட்டும் பண்பு, அதுதான் இந்த போராட்டத்தில் வெற்றியைப் பெற்றுத்தந்தது என்று எழுதியுள்ளார். இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் மிகவும் சிரமப்பட்டு அந்த சாலையில் நடக்க அனுமதி வாங்கினார்கள் அல்லவா? இது நடந்தது 1924-இல். 2023இல் கற்ப கிரகத்துக்குள் தலித் பெண் உதவி அர்ச்சகர் நுழைய முடிந்திருக்கிறது. 100 ஆண்டுகளில் இதைச் சாதித்தது யார்? திராவிட இயக்கம்தானே? அவ்வளவு எளிதாக இது நடந்துவிட்டதா? “தந்தை பெரியார்தான் இருந்து இயக்கினார், தற்போது இறந்தும் இயக்குகிறார்”.

சனாதனத்தின் கொடுமைகள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. மகாராஷ்டிராவில் பஞ்சமர்கள் வாயில் ஒரு குவளையையும், இடுப்பில் ஒரு தென்னை ஓலையையும் கட்டிக்கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் நடந்தால் தரை தீட்டாகிவிடுமாம். உயர்ந்த ஜாதியினாராகக் கருதிக் கொள்பவர்கள் எதிரில் வந்தால் கீழே படுத்துக்கொள்ள வேண்டும். கேரளாவில் நம்பூதிரி பார்ப்பான் தெருவில் வந்தால் நாயர் வகுப்பினர் 7 அடி தொலைவுக்கு அப்பால் செல்ல வேண்டும். புலையர்கள் 96 அடி தொலைவில் நிற்க வேண்டும். யார் யார் எத்தனை அடி தூரத்தில் இருந்து வர வேண்டும் என்பதெல்லாம் இங்கு வகுக்கப்பட்டிருந்தது. அந்தக் கொடுமைகள் எல்லாம் தற்போது அடித்து நொறுக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் வரும்வரை இங்கு பள்ளிக்கூடங்களே கிடையாது. குருகுலம் மட்டுமே உண்டு. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. ஆனால் அந்த தெருவுக்குள் சென்று சூத்திரர்கள் அமர்ந்து படிக்க முடியாது. இதை பார்த்த ஆங்கிலேயர்கள் இனிமேல் இவர்களுக்கு கல்வி வழங்குவது எங்கள் கடமை என்று கூறி 1813-இல் சாசன சட்டத்தை உருவாக்கி, ஒரு ஆண்டுக்கு ஒரு இலட்ச ரூபாயை ஒதுக்கினார்கள். பின்னர் 1835-இல் லார்ட் மெக்காலே வந்தார். அவர்தான் அப்போதைய கவர்னர் ஜெனரலின் சட்ட ஆணையர். அப்போது பார்ப்பனர்கள் அந்த ஒரு இலட்ச ரூபாயை சமஸ்கிருதத்திற்கும், பாரசீக மொழிக்கும் செலவு செய்யுங்கள் என்று கேட்டபோது, அதை உடனடியாக மறுத்தார் மெக்காலே. அந்த தொகை ஆங்கிலக் கல்விக்கு பயன்படுத்தப்படும் என்று உத்தரவிட்டார்.

“இரத்தத்திலும், நிறத்திலும் மட்டுமே இந்தியர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களது சிந்தனைப் போக்கில் ஆங்கிலேயர்களாக இருப்பார்கள். ஆங்கில மொழியில் இருப்பதை எல்லாம் அவர்களுக்கு அளிப்போம். அவர்கள் தங்கள் தாய் மொழியை பலப்படுத்துவார்கள்” என்று சொல்லி அனைவருக்கும் கல்வியை கொண்டுவந்தார். பொதுக்கல்வி என்ற முறையை கொண்டுவந்ததே ஆங்கிலேயர்கள். அப்படி கொண்டுவந்த கல்வி முறையில்தான் நேரு, காந்தி, அம்பேத்கர் உள்ளிட்ட ஏராளமான தலைவர்கள் உருவானார்கள்.

**(தொடரும்)**

**தொகுப்பு : விஷ்ணு**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# அரசியல் பேசும் நீதிபதியை கண்டித்து மூத்த வழக்கறிஞர் துரைசாமி தலைமை நீதிபதிக்கு கடிதம்

கோயில் விடுதலை அரசியலா? அவசியமா? என்ற தலைப்பில் விவாத நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றிருக்கிறது. இதில் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் ஜி.ஆர்.சுவாமிநாதன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுப் பேசியிருக்கிறார். இந்த நிகழ்வில் ரமேஷ், அமெரிக்கை நாராயணன், ரங்கராஜன் நரசிம்மன், சுமந்த் ராமன் ஆகியோர் கலந்துகொண்டு பேசியிருந்தனர். இவர்களின் பின்னணி என்னவென்று நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. முதலில் மார்க்சிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினர் க. கனகராஜ் கலந்து கொண்டு பேசுவதாக இருந்தது. ஆனால் அவர் இந்த விவாதத்தில் பங்கேற்கவில்லை.

நிகழ்ச்சியில் பேசிய நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், கோயில்களை அரசுப் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கருத்து குறித்து விவாதங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார். ஒரு நீதிபதி இப்படி அரசியலை பேசலாமா? என்பதை சுட்டிக்காட்டி தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் துணைத் தலைவரும் மூத்த வழக்கறிஞருமான சு.துரைசாமி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சி ஒன்றில் பேசிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட், நீதிபதிகள் அரசியல் கருத்துகளை பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று பேசியிருக்கிறார்.

இப்படி நீதிபதிகள் வெளிப்படையாக அரசியல் கருத்துகளை பேசி சர்ச்சைகளை உருவாக்கிவருகின்றனர். அதேபோல் மதுரை உயர்நீதிமன்றக் கிளை நீதிபதி ஸ்ரீ மதி, இந்துக்கள் அல்லாதவர்கள் இந்துக்கள் கோயிலுக்குள் நுழையக்கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார். இதுகுறித்து சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு விழுப்புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இது குறித்து பேசும் போது :- **இப்படியொரு தீர்ப்பை வழங்கியிருக்கிற அந்த நீதிபதி இந்துக்கள் என்றால் யார் என்பதையும் விளக்கியிருக்க வேண்டும். அதை அவரால் விளக்க முடியுமா? என்ற கேள்வியை அவர் எழுப்பியிருக்கிறார். பால ராமர் சிலையை செய்த அந்த சிற்பியாலே இனிமேல் அந்த சிலையை தொட முடியாது. அதற்கு காரணம் வர்ணாசிரம தர்மம், சனாதனம். அந்த சனாதனத்தை பற்றித்தான் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அதற்காக அவர் தலையை சீவ வேண்டும் என பேசினார்கள் என்று சுட்டிக்காட்டி பேசியிருக்கிறார் முன்னாள் நீதிபதி சந்துரு.**

நீதிபதிகள் சட்டத்தில் இருந்து விலகி மதவாதத்தையும், அரசியலையும் பேச கிளம்பியிருப்பது நீதித்துறையின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைத்துவிடும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளோம். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சுட்டிக்காட்டியதைக் கருத்தில் கொண்டு இத்தகைய நீதிபதிகள் மதவாதத்தையும், அரசியலையும் பேசுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே மக்களின் எதிர்ப்பார்ப்பு.

## வினா விடை

• அயோத்தி ராமன் கோயிலில் இடி விழாமல் காப்பாற்ற இடிதாங்கி பொருத்தப்பட்டுள்ளது. **– செய்தி**

ஆமாம், அதற்காக புதிய ஆகமம் ஒன்றை எழுதி அதற்கு மோடி இடிதாங்கி ஆகமம் என்று பெயர் சூட்டியிருக்கிறோம்.

• அமலாக்கத்துறை சுதந்திரமாகச் செயல்படுகிறது **– நாடாளுமன்றத்தில் மோடி**

ஆமாம், அதற்காகத்தான் ஒரே இயக்குநரை மூன்றுமுறை முறைகேடாக பதவி நீடிப்பு வழங்கினோம். உச்சநீதிமன்றம்தான் சுதந்திரத்தைப் பறித்துவிட்டது.

• 1976 நெருக்கடி நிலை காலத்தில் விலைவாசி கடுமையாக உயர்ந்தது. இப்போது உயரவில்லை **– மோடி**

ராஜராஜ சோழன், பல்லவ மன்னன் காலத்தில் விலைவாசி அதிகமாக இருந்ததா?

• பிற மதத்தவர் இந்து மதத்தை தழுவ திருப்பதியில் ஏற்பாடு – சனாதன தார்மீக கருத்தரங்கில் தீர்மானம் **– செய்தி**

இந்து மதத்தில் எந்த ஜாதியில் அவர்களுக்கு இடம் கொடுப்பீர்கள்? ஜாதி மாறவும் சிறப்புத் திட்டம் எதாவது இருக்கிறதா?

• சண்டிகர் தேர்தலில் தில்லுமுல்லு செய்த தேர்தல் அதிகாரி மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் **– உச்சநீதிமன்றம்**

சரி, அவரை ஒரு மாநிலத்திக்கு ஆளுநராக அனுப்பி வைக்கிறோம்.

## இந்தியா கூட்டணியை ஆதரித்து கோபியில் பரப்புரை

ஈரோடு வடக்கு மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 28.01.2024 அன்று கோபி நாகப்பன் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கோபி ஈசுவரமூர்த்தி தலைமை தாங்கினார். கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் முன்னிலை வகித்தார்.

திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு மற்றும் மேட்டூர் ராஜா அகியோரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தாவை விரைந்து அனுப்புவது, பரப்புரைக் கூட்டங்கள் நடத்துவது, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திராவிடர் விடுதலைக் கழகம் I.N.D.I.A கூட்டணியை ஆதரிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட செயல்பாடுகளுக்கு கட்டுப்படாமல் தொடர்ந்து செயல்பட்டு வந்ததால் சதுமுகை பழனிச்சாமி கழகத்தின் அடிப்படை உறுப்பினர் மற்றும் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்படுகிறார் என்பது தோழர்கள் அனைவரின் ஒப்புதலோடு முடிவு செய்யப்பட்டது.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி, மாவட்ட அமைப்பாளர் கோபி நிவாசு, மாவட்டச் செயலாளர் எலத்தூர் செல்வகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கலைச்செல்வன், கோபி அருளானந்தம், தூ.நா. பாளையம் ஒன்றியக் கழகச் செயலாளர் கருப்பணன், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சித்தா பழனிச்சாமி, கோபி ஈசுவரமூர்த்தி, பவானி ஒன்றியச் செயலாளர் வினோத், நம்பியூர் ஒன்றியக் கழகச் செயலாளர் நம்பியூர் ரமேஷ், சத்தி ஒன்றியக் கழகச் செயலாளர் புதுரோடு சிதம்பரம், கோபி ரகுநாதன், கோபி ஜெகநாதன், வழக்குரைஞர் தமிழரசன், கவுந்தபாடி செல்வம், கவுந்தபாடி கோபால், காந்திநகர் சின்னதம்பி, அறிவுக்கனல், யாழ்மதி, அறிவரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**முதல் பக்கத் தொடர்ச்சி**

தீவிரப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றிய அரசுக்கு இப்படி எந்த கட்டுப்பாடும் இல்லாத நிலையே இருக்கிறது. ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய அவசியமில்லாத செஸ், சர்சார்ஜ் போன்ற வரிகள் வழியான வரவு 2011-12இல் 11 சதவிகிதம் அளவிற்கு இருந்தது. இப்போது அது 25 சதவிகித அளவிற்கு அதிகரித்திருக்கிறது. இதற்கு பிறகும் கூட ஒன்றிய அரசு தாறு மாறாக கடன் வாங்கியிருக்கிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

### மோடி அரசின் ரூ.205 லட்சம் கோடி கடன்

1947ம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது முதல் 2014ம் ஆண்டு மோடி வருவதற்கு முன்பு வரை இந்திய அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு கடன் எல்லாம் சேர்த்து அதிகபட்சமாக 2014ல் ரூ.55 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால், பெட்ரோல் - டீசல் - சமையல் எரிவாயு கொள்ளை என்பது தொடங்கி ஒவ்வொன்றிலும் வழிப்பறி போன்று வரிச்சுமை ஏற்றிய ஒன்றிய அரசாங்கம் 9 வருட காலத்தில் கூடுதலாக 100 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கியது. அடுத்த ஆறு மாத காலத்தில் இன்னும் 50 லட்சம் கோடி ரூபாய் கடன் பெற்று கடந்த 2023 செப்டம்பர் மாதத்தில் இந்தியாவின் மொத்த கடன் ரூ.205 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது, அண்ணாமலை சொன்னது போல ஒவ்வொரு ரேசன் கார்டுக்கும் எவ்வளவு கடன் என கணக்கிட்டால் பாஜக ஆட்சிக்கு வரும் போது ஒவ்வொரு ரேசன் அட்டை மீதும் ரூ.1.86 லட்சமாக இருந்த கடன், கடந்தாண்டு மார்ச் மாதத்தில் ரூ.4.97 லட்சமாக அதிகரித்து கடந்தாண்டு செப் டம்பர் மாதத்தில் ரூ.6.37 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அவர் விமர்சிக்கும் தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ரேசன் அட்டைதாரருக்கும் 3.81 லட்சம் கடன் ஏற்றி விட்டது என்றால் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை (குஜராத்துக்கும், உ.பி. க்கும் சேர்த்து) ஒவ்வொரு அட்டைதாரருக்கும் இதைப்போல ஏறத்தாழ 1.7 மடங்கு கடனை ஏற்றி வைத்திருக்கும் மோடி அரசை எப்படி விமர்சிப்பது? அண்ணாமலை அடுத்தவர் கண்ணிலிருக்கிற துரும்பைக் கூட தெளிவாக பார்த்து அதை தூண் என்று துள்ளிக் குதிக்கிறார். ஆனால், விஸ்வகுரு என்று தனக்குத்தானே மார்தட்டிக் கொள்கிற மோடி மாநிலங்களுக்கு நிதியைக் குறைத்து ஒன்றிய அரசுக்கு மட்டும் வரும் வருவாயை அதிகரித்து மாநிலங்களை பட்டினி போட்டு, வரிகளையெல்லாம் அபகரித்துக் கொண்டும் பேரிடருக்கு கூட உதவாமல் வஞ்சனை செய்து கொண்டும் இருக்கும் போதே என்ன செலவிற்காக ஒவ்வொரு குடும்ப அட்டை மீதும் 6.37 லட்சம் சுமையை ஏற்றினார் என்று கேள்வி கேட்க வேண்டும். 67 வருடங்களில் ஒரு அட்டைக்கு சராசரி 1.86 லட்சம் கடனாக இருந்ததை 9 வருடங்களில் 4.51 லட்சம் கடனை அதிகரித்து, 6.37 லட்சம் கடனாக மாற்றியவர்களை என்ன செய்வது?.

சரியான விமர்சனங்களை முன்வைப்பது தவறில்லை. மாறாக, மாநில அரசை விமர்சிப்பதையே நேர்த்திக் கடனாக வைத்துக் கொண்டு இருப்பவரால் இப்படித்தான் நேர்த்தியற்று பேசத் தோன்றும்.

**நன்றி : தீக்கதிர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : February 09, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran